முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1295

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்காரமே ஞான குருவே
ஓங்காரமான மாதவ பலமே
ஓங்காரக்குடில் படைத்து உலகோர்க்கு
ஓங்கார ஞானம் அருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 03 ம் நாள், 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை)
வரமாக யான் உன் தடத்தில்
வல்லமை காட்டி உன்னோடு கலந்திருக்கின்றேன்
3. இருக்கவே உலகோரை நோக்கி
எளிமைபட இனிமைபட அரங்கன் நீ தரும் அனைத்து உபதேசங்களும்
ஆறுமுகப்பெருமான் யான் தரும் உபதேசமாகும்
அறமாக அருளாக அனைவருக்கும் நீ தருகின்ற காப்பு
4. காப்பதுவும் ஆறுமுகன் யான் போட்ட வேலியாகும்
ஆகவே உலகோர் அரங்கனை சரணாகதி கொண்டு
ஆற்றல்பட தர்மத்தில் கலந்து வந்தால்
ஜெகமெல்லாம் என் சக்தி ஆற்றலாகப் பரவி
5. சித்திகளும் உலகோருக்கு இலகுவாகும்
சித்திமிகு ஞானலோகமாக சிந்தை தெளிவுபட
உலகோரெல்லாம் சத்தியவழியில் வந்து ஞானிகளாக
சற்குரு அரங்கன் வழி அணிவகுப்புச் செய்து
6. செய்துமே உலகமெங்கும் மாற்றம்
செப்பிடுவேன் ஞான லோகமாற்றமாக
ஐயமற அரங்கனால் அரங்கேறும்
அகிலத்தார் ஒன்றிணைய இது சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—